பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 25 | திங்கட்கிழமை | 11.11.2024 | அதிர்வு 101

## தேர்தல் பிரசாரப் பணிகள் இன்று நள்ளிரவுடன் நிறைவு



நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் இன்று திங்கட்கிழமை நள்ளிரவு 06

# தீர்வு குறித்து யாழில் அநுர மூச்சே விடவில்லை



## காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் பற்றியும் வாயே திறக்கவில்லை





(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

"வடக்கு மக்களே உங்கள் காணிகளைப் படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுப்போம்."

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 06

## மக்களுக்குத் தெரியாதவர்களே திசைகாட்டியில் வேட்பாளர்கள்

### அநுரவைக் கலாய்த்த ரணில்



"திசைகாட்டியில் வாக்களிப்பது யாருக்கு? அவர்களின் வேட்பாளர்கள் யார்? என்று மக்களுக்குத் தெரியாது. அவ்வாறு இருக்கும்போது, அறிமுகம் இல்லாதவர்களுக்கு எப்படி வாக்களிப்பது? இதுவா ஜனநாயகம்?" 05




'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்.' அந்த மாதிரி இருக்கின்றது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் வெற்றுவேட்டு வாய்ச் சவடால் பேச்சு அறிவிப்புகள்.

தாங்கள் ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்தால், அதுவரை இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நாடாளுமன்ற 05






# தேர்தல் தொடர்பில் இதுவரை 2,580 முறைப்பாடுகள் பதிவு

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் இதுவரை 2,580 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள தாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று முன்தினம் 232 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எவ்வாறாயினும் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் 1,999 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ள அதே நேரம், 581 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

# 50,000 வாக்காளர் அட்டைகள் தபால் நிலையங்களில்



பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரையிலும் சில பகுதிகளுக்கு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படாமல் உள்ளன என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி மேலும் 50,000 வாக்காளர் அட்டைகள் தபால் நிலையங்களில் உள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி முதல் இந்த மாதம் 07ஆம் திகதி வரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களின் வீடுகளுக்கு தபால் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டன.

இந்தநிலையில் இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக் கப்பெறாதவர்கள் அருகிலுள்ள தபால் திணைக்களத்துக்கு சென்று பெற்றுக்கொள்ளுமாறு பிரதி தபால் மா அதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித்துள்ளார் பொதுத்தேர்தலுக்கு இன்னும் 04 நாள்களே உள்ளன.

இதன்படி தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இன்று நள்ளி ரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக எதிர்வரும் புதன் மற்றும் வியாழன் ஆகிய இரண்டு தினங்களுக்கு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் திங்கள் கிழமை 18 ஆம் திகதி மீண்டும் பாட சாலை ஆரம்பிக்கப்படவுள்ளது.




# தேர்தல் கடமைகளுக்காக 884 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன

## இலங்கை போக்குவரத்து சபை அறிவிப்பு

இம்முறை பொதுத் தேர்தல் கடமைகளுக்காக 884 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

மாவட்ட தேர்தல் காரியாலயங்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு அமைவாக பஸ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொதுமுகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹங்ஸ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் 13ஆம் திகதி அனைத்து மாகாண அத்தியட்சகர்கள் ஊடாக குறித்த பஸ்கள் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படும் எனவும் சபையின் பிரதி பொதுமுகாமையாளர் குறிப்பிட்டார்.


# ராஜ ராஜ சோழனின் சதயவிழாவில் ஆறு.திருமுருகன் நேற்று சிறப்புரை

தஞ்சாவூரில் நேற்று இடம்பெற்ற ராஜ ராஜ சோழனின் 1039 சதயவிழாவில் ஈழத்தமிழர்கள் சார்பில் பங்குபற்றிய ஆறு.திருமுருகன் அங்கு இராஜ இராஜ சோழனின் சிலைக்கு மாலையணிந்து சிறப்புரையாற்றினார்.

அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை:-









யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
M.A.சுமந்திரன்
ஆட்புலம் -ஆதாரம் -ஆளுகை
1

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர்களின் சிபார்சின் பேரில் வழங்கப்பட்ட மதுபான சாலை உரிமங்கள் பற்றிய விவரங்களை மூன்று நாள்களுக்குள் அம்பலப்படுத்துவார் என்று பிரசார கூட்டங்கள் எங்கும் முழங்கிய அநுரகுமார திஸநாயக்க இப்போது ஜனாதிபதியாகி ஒன்றரை மாதங்கள் கடந்த பின்னரும் அந்தப் பரிந்துரை செய்தோரின் பட்டியலை வெளியிட முடியாமல் தடுமாறுகின்றார்.

ஊழல் ஒழிப்பு, லஞ்சம் தடுப்பு, அரச பதவிகள் மற்றும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தலை இல்லாதொழித்தல் போன்ற பலவற்றை செய்யப் போகிறார் எனக் கூறி அதிகாரத்துக்கு வந்த அநுரகுமார திஸநாயக்க அவற்றில் எதையும் காத்திரமாகச் செய்பவராகத் தெரியவில்லை.

அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அதிகார பீடம் ஆட்சிக்கு வந்தால் கடுமையாக நடந்து கொள்ளும், லஞ்ச, ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக இருக்கும், குற்றமிழைத்தோர் விரைந்து தண்டிக்கப்படுவோர் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எல்லாமே புஸ்வாணமாகிப் போய்விட்டன.

ஜனாதிபதியான பின்னர் அநுரகுமார திஸநாயக்க நேற்று முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுவதற்காக அவர் வந்தபோது அங்கு குறைந்தது ஐயாயிரம் பொது மக்களாவது திரண்டிருந்தனர். இந்தத் திரட்சி புதிய ஜனாதிபதிக்கான ஆதரவு நாட்டில் வலிமை அடைந்துள்ளது என்பதைக் காட்டுவதாக இருக்கும் என்று பலரும் பேசிக் கொண்டாலும், கூட்டம் முடிந்த பின்னர் வந்திருந்தவர்களை அழைத்துச் செல்ல வரிசையாக வந்த பஸ்கள் உண்மையை அம்பலப்படுத்தி விட்டன.

இந்தத் தேர்தல் பிரச்சாரத்திற்காக மாவட்டத்துக்கு வெளியிலிருந்தும் பஸ்களில் ஆள்கள் கூட்டிவரப்பட்டார்கள் என்பதுதான் கூட்டத்தின் அந்தத் திரட்சிக்குக் காரணம் என்பது பின்னர் தெரிய வந்தது.

நேற்று மாலை இந்தக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அதே சமயம் யாழ் முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற ஒரு பிரசார சந்திப்பில் இவ்வாறு மாவட்டத்திற்கு வெளியிலிருந்து ஆயிரங்களைத் தாண்டியோர் ஜனாதிபதி பங்கு பற்றும் யாழ் கூட்டத்துக்கு கூட்டிவரப்பட்டு இருக்கின்றனர் என்ற செய்தியை சுமந்திரனும் விவரித்து இருந்தார்.

இன, மத வேறுபாடுகள் கடந்து எல்லோரையும் சமமாக நடாத்துவோம் என உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காக அங்கு பௌத்த பிக்குவின் காலில் மட்டும் வீழ்ந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் பாசையூரில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அங்கே மேடை அமைக்கப்பட்டிருந்த பகுதிக்கு வந்தபோது அங்கு அமர்ந்திருந்த சர்வமத குருமாரிடம் ஆசியை பெற்ற பின்பே மேடையில் ஏறி உரையாற்றினார். அச்சமயமே பௌத்த பிக்குவின் காலில் மட்டும் அவர் வீழ்ந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

---

## மக்களுக்குத் தெரியாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து கொட்டகலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

“இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் களமிறங்கி இருக்கும் வேட்பாளர்களின் முதலாவது கூட்டத்திலேயே நான் இன்று கலந்துகொண்டுள்ளேன்.

எமது வேட்பாளர்கள் அதிகமான மாவட்டங்களில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டாலும் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என ஜீவன் தொண்டமான் தெரிவித்திருந்தார்.

1947ஆம் ஆண்டில் இருந்து அனைத்து நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்ட ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் யானைக்கும் இந்த பிரதேச மக்களுக்கும் இடையில் பாரிய தொடர்பு இருக்கின்றது.

இந்தப் பிரதேச மக்களுக்கு வாழ்வதற்கான வசதிகளை வழங்குவதுடன் 1986இல் சிறிமா – சாஸ்திரி மற்றும் சிறிமா – இந்திரா ஆகிய இரண்டு ஒப்பந்தங்களின் கீழ் இந்தியாவில் அல்லது இலங்கையில் பிரஜாவுரிமை கிடைக்காத அனைவருக்கும் நாங்கள் இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொடுத்தோம்.

தொண்டமான் ஐயா எடுத்த இந்த நடவடிக்கையும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன அதற்கு வழங்கிய ஒத்துழைப்புடன் நாங்கள் அனைவரும் அதற்குச் சம்மதம் வழங்கினோம்

ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்து பெருந்தோட்ட மக்களுக்கு அன்று பிரஜாவுரிமையை வழங்கும்போது மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ராஹண விஜேவீர அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

அதற்காக மக்கள் விடுதலை முன்னணி இந்த மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என நான் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெரிவிக்கின்றேன்.

பெருந்தோட்ட மக்களுக்கு வாக்குரிமையை வழங்க வேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணி அன்று தெரிவித்தது. அப்படியென்றால் ஏன் அவர்களுக்கு இன்று நீங்கள் வாக்களிக்க வேண்டும் என மக்களிடம் கேட்கின்றேன்.

2001இல் ஆறுமுகன் தொண்டமான் எங்களுடன் இருக்கும்போது இந்தியப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்டு இலங்கையில் இருந்தவர்கள் இருந்தார்கள்.

அவர்கள் இந்தியாவுக்குச் செல்ல முடியாது. இலங்கையில்தான் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. அப்போது மீண்டும் ஒரு சட்டத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து அவர்களுக்கும் இலங்கைப் பிரஜாவுரிமையை வழங்கினோம். இவை அனைத்தும் யானை யின் காலத்திலேயே வழங்கப்பட்டது.

கொட்டகலை எந்த அபிவிருத்தியும் இல்லாமல் இருந்தது. தற்போது தனியான பிரதேச சபை, பிரதேச செயலகம் எனப் பல அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளன.

யானைக்கு வாக்களித்தால் அந்த அபிவிருத்திகள் கிடைக்கும். அதனால் இந்த முறை யானைக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றவுடன் அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். நாடாளுமன்றத்தைக் கலைக்கும்போது ஏன் கலைக்கின்றோம், அவரின் வேலைத்திட்டம் என்ன என எதுவும் தெரிவிப்பதில்லை. ஆனால், என்னிடம் 16 குடைகள் இருப்பதாகவும் வேறு விடயங்கள் தொடர்பாகவும் தெரிவிக்கின்றார்.

அதேநேரம் ஊடகங்களை அவர் எச்சரிக்கின்றார். நாடாளுமன்றத்தைச் சுத்தப்படுத்த வாக்களிக்குமாறு மாத்திரமே அவர் கேட்கின்றார்.

திசைகாட்டியில் வாக்களிப்பது யாருக்கு? அவர்களின் வேட்பாளர்கள் யார்? என்று மக்களுக்குத் தெரியாது. அவ்வாறு இருக்கும்போது, அறிமுகம் இல்லாதவர்களுக்கு எப்படி வாக்களிப்பது? இதுவா ஜனநாயகம்? எங்களது கட்சி உட்பட ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஏனைய கட்சிகளில் மக்களுக்கு அறிமுகமானவர்களே போட்டியிடுகின்றனர்.

அவர்களுக்கு மக்கள் வாக்களிப்பார்கள். திருடர்களைப் பிடிப்பதாக அநுரகுமார தெரிவிக்கின்றார். ஆனால், அதற்குத் தேவையான சட்டத்தை நாங்கள் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கும்போது திசைகாட்டி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

இந்தப் பிரதேசத்தில் அதிகமான மக்கள் வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாமல் கஷ்டப்படுகின்றனர். இவர்கள் ஆட்சிக்கு வந்து ஒரு மாத காலத்தில் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரம் ரூபாவில் இருந்து ஆயிரத்து 350 ரூபா வரை அதிகரித்தோம். அவர்கள் 2ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதாகத் தெரிவித்தார்கள். இப்போது 2ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு தெரிவிக்கின்றோம். அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

அதேபோன்று பெருந்தோட்ட மக்களின் வீட்டுப்பிரச்சினைக்கு யாரிடமும் தீர்வு இருக்கவில்லை. ஜீவன் தொண்டமானுடன் நாங்கள் கலந்துரையாடி, அரசின் காணிகளை இவர்களுக்கு வழங்கி அவர்களுக்குத் தேவையான முறையில் வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள இடமளித்து, லயன் அறைகள் இருக்கும் இடங்கள் அனைத்தையும் கிராமங்களாக மாற்ற நடவடிக்கை எடுத்தோம். அதனால் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு நாங்களே தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தோம்.

பெருந்தோட்ட மக்களுக்குச் சம்பளத்தை அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுத்தோம். அதேபோன்று அரச ஊழியர்களுக்கும் சம்பளம் அதிகரிக்க நடவடிக்கை எடுத்து, அதற்குக் குழுவொன்றை நியமித்தோம். குழுவின் பரிந்துரைக்கமைய இரண்டு கட்டங்களாக சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தோம். முதற்கட்டமாக அடுத்த வருட வரவு – செலவுத் திட்டத்தில் அதிகரிப்பதற்குத் தீர்மானித்து அதற்கு அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டது.

ஆனால், தற்போது அநுரகுமார திஸாநாயக்க அந்தச் சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது என்கிறார்.

நாடாளுமன்றத்துக்கு எங்களது உறுப்பினர்களை அதிகம் அனுப்பினால் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்காக நாடாளுமன்றத்தில் போராட நடவடிக்கை எடுப்போம்.

நாங்கள் 2028இல் மீளக் கடன் செலுத்த வேண்டி இருக்கின்றது. அதற்கு எமது தேசிய உற்பத்தியை நூற்றுக்கு 15 வீதமாக அதிகரித்துக்கொள்ள வேண்டும். தற்போது எமது தேசிய வருமானம் நூற்றுக்கு 12 வீதமாகவே இருக்கின்றது.

நாங்கள் உரிய காலத்தில் கடன் செலுத்த முடியாமல் போனால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். இதுவே தற்போதுள்ள பிரச்சினை. இதற்குத் தீர்வு என்ன எனக் கேட்டால் ஜனாதிபதியிடம் பதில் இல்லை.

இந்த நாட்டைப் பாதுகாக்கவோ பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவோ திசை காட்டியால் முடியாது. அவர்களுக்கு அதனைச் செய்யவும் தெரியாது.

அதனால் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க அது தொடர்பில் அறிந்தவர்கள் யானை சின்னத்திலும், சிலிண்டர் சின்னத்திலும் பாாட்டியிடுகின்றனர்.

அவர்களைத் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் முட்டை விலை ஆயிரம் ரூபாவுக்கும் அதிகரிக்கும்.” – என்றார்.

# தீர்வு குறித்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான பிரதான பிரசாரக் கூட்டம் பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு முன்பாக ஜனாதிபதி தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆனால், தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்தும், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் பற்றியும் ஜனாதிபதி தனது உரையில் எதுவும் சொல்லவில்லை.

அவர் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்காகத் தற்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வந்தாரா? முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணம் வந்தாரா? நாம் வந்தோம். தேர்தலை வெற்றிகொள்ள மட்டும் எமக்கு யாழ்ப்பாணம் தேவை இல்லை. யுத்தம் இல்லாத நாட்டை உருவாக்கவும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பவும் யாழ்ப்பாணம் தேவை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எனக்கு 27 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது அது மிகவும் சிறியது. ஆனாலும், அது எமக்கு மிகப்பெரியது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஏனையவர்களில் இருவர் வெல்வார்கள் என்றே வடக்கில் சொல்லப்பட்டது. ஊடகங்களும் அதைத்தான் சொன்னது. நாம் வெல்வோம் என்ற செய்தி வடக்கில் தமிழ் மக்களிடம் சரியாகச் செல்லவில்லை.

தெற்கில் நாம் வேலை செய்தளவுக்கு வடக்கில் வேலை செய்யவில்லை என்பதும் உண்மைதான்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் எமது காரியாலயம் நிரம்பி வழியத் தொடங்கியது. இதன் பலனாக இன்று ஆயிரக்கணக்கான மக்கள் கூடியுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் உள்ள கட்சிகளின் தயவுடன் ஏனைய கட்சிகள் வடக்குக்கு வந்தன. அவர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களையே ஒன்றிணைத்தார்கள். மக்களை ஒன்றிணைக்கவில்லை. தேசிய மக்கள் சக்தியில் நாங்கள் வடக்கில் தலைவர்களுடன் பேசியதுடன் மக்களுடன் இணைந்து அரசியல் செய்கின்றோம்.

தெற்குக்கு எதிராக வடக்கிலும், வடக்குக்கு எதிராக தெற்கிலும் செயற்பட்டு எவ்வாறு ஒற்றுமையைக் காட்டுவது? நாம் ஒரு அரசியல் கட்சியின் கீழ் ஒன்றிணையத் தயார் என்பதை இந்த மக்கள் கூட்டம் காட்டுகின்றது.

நான் சொல்லும் விடயங்கள் உங்களுக்குத் தேவை இல்லையா? தேவை தானே! பழைய அரசியலைக் கைவிடுவோம். புதிய அரசியலுக்கு வருவோம். சிங்களம், தமிழ், முஸ்லிம் பேதமின்றி பிரியாது சண்டை பிடிக்காது வாழ்வோம். அது தோல்வியடைந்த பழைய அரசியல். நவம்பர் 14 ஆம் திகதி நாம் பங்களித்து சக்தி வாய்ந்த அரசை முன்கொண்டு செல்வோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய பலரும் வெளிநாட்டில் வியாபாரிகளாக, கல்விமான்களாக, ஆராய்ச்சியாளர்களாக உள்ளனர்.

யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்ப நீங்கள் யோசிப்பீர்கள் தானே? உங்கள் அறிவை எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வாருங்கள். உங்கள் நிதியை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வாருங்கள். இந்த நேரத்தில் கொண்டு வராத நிதி மற்றும் அறிவால் பலனில்லை. எங்களுக்கும் எங்கள் கட்சிக்கும் ஒரே எதிர்பார்ப்பு இருக்கின்றது. அது இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதுதான்.

இங்கே ஏனைய கட்சித் தலைவர்கள் பலர் என்ன கூறுகின்றனர். நாடாளுமன்றத் தேர்தலின் பின்பு இந்த அரசிலும் அமைச்சுப் பதவி எடுப்பேன் என்கின்றனர். ஆனால், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு நாம் பலரை அழைத்தபோது பழைய தொடர்புகளை விட முடியாது எனக் கூறி இரண்டாகப் பிரிந்து நின்று அந்தத் தலைவர்களின் மேடையில் ஏறி அலங்கரித்தனர்.

தலைவர்களே நீங்கள் பஸ்ஸை தவற விட்டு விட்டீர்கள். எனவே, யாழ். இளைஞர்களே தேசிய மக்கள் சக்தியின் கொடியை ஏந்துங்கள். பஸ்ஸை தவற விட்டவர்களுக்கு இனி அரசில் இடமில்லை. நாம் தேசிய ஒற்றுமையை வளர்ப்போம்.

வடக்கு மக்களே உங்கள் காணிகளைப் படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுப்போம்.

இந்திய மீனவர்கள் இன்று உங்கள் கடல் முழுவதையும் அழித்து சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். உங்கள் கடலின் உரிமையை நாங்கள் உறுதிப்படுத்துவோம்." - என்றார்.











# தேர்தல் பிரசாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

12 மணியுடன் நிறைவடைகின்றது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இது குறித்து விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் அனைத்தும் திங்கட்கிழமை (இன்று) நள்ளிரவுடன் நிறைவுக்கு வருகின்றன. ஊடகங்கள் வாயிலாக கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்களுக்குத் தடை விதிக்கப்படுகின்றது. அதன் பிறகு தேர்தல் தினம் வரை மௌன காலமாகும்.

மேலும், தேர்தல் பிரசாரத்துக்காக அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்களை அகற்றிக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். அதேபோன்று வேட்பாளர்களின் இல்லங்களில் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தால் அவற்றையும் அகற்ற வேண்டும். இல்லையேல் தேர்தல் சட்டத்துக்கு அமைய அவை அனைத்தும் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வாக்காளர்கள் தமது வாக்கைப் பயன்படுத்துவதற்காக உரிய வகையில் விடுமுறையைப் பெற்றுக்கொடுக்குமாறு அரச மற்றும் தனியார் துறையினரிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தேர்தலை நியாயமாகவும் சுமுகமாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆகையால் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்." - என்றார்.

# ஹெரோயின், ஐஸ் போதைப்பொருளுடன் கொழும்பில் குடும்பஸ்தர்கள் மூவர் கைது!



கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட இரு வேறு சுற்றிவளைப்புக்களின்போது கல்கிஸை மற்றும் உடுகம பகுதிகளில் குடும்பஸ்தர்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதவல வீதிக்கு அருகில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இரு சுற்றிவளைப்புக்களின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 38, 40 வயதுடைய மக்கொன மற்றும் மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 10 கிராம் 350 மில்லிகிராம் மற்றும் 11 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காகக் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், உடுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமகிகம பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவ பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமின் அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 46 வயதுடைய உடுகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

சந்தேகநபரிடம் இருந்து 12 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர் மேலதிக விசாரணைகளுக்காக உடுகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரசாரங்களை விசாரிக்க விசேட குழு







பொதுத் தேர்தல் காலத்தில் சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரசாரங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவில் 5 அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர்.

பேஸ்புக், இன்ஸ்கிராம், டிக்டொக் போன்ற சமூக ஊடகங்கள் ஊடாக ஒரு கட்சி அல்லது வேட்பாளருக்கு எதிராக பதிவிடப்படும் தவறான பிரச்சாரங்கள் தொடர்பில் கண்காணிப்படவுள்ளது.

பொய்ப் பிரசாரங்களை சமூக வலைத்தளங்களில் இருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் வகையிலான பதிவுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024

“கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதறகான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்.”

- இரவீந்திரநாத் தாகூர்
(வங்கக் கவிஞர்)



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அபத்த நம்பிக்கை

பொதுத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்கள் மற்றும் பரப்புரை நடவடிக்கைகள், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஏனைய சமூக ஊடகங்கள் வாயிலான பிரசாரங்கள் எல்லாம் இன்று இரவோடு முடிவுக்கு வருகின்றன.

ஊடகங்கள் வேண்டுமானால் இன்று இரவு வரை இடம் பெற்ற பிரசாரங்கள் பற்றிய செய்திகள், தகவல்களை மக்களுக்கு நாளை கொடுக்க முடியும்.

எது, எப்படியாயினும் அடுத்த இரண்டு நாள்கள் தேர்தலுக்கு முந்திய அமைதிக் காலம்.

இந்த காலத்தையும் தந்திரோபாயமாக பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகின்ற கில்லாடி வேட்பாளர்கள் இல்லாமல் இல்லை. ஆயினும் இம்முறை தேர்தல் ஆணையம் மிகக் கூர்ந்து கவனித்து நடவடிக்கை எடுக்கும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் -

தேர்தலுக்கு முந்திய கடைசி நேர வருகையை யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பதிவு செய்திருக்கிறார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

அவரிடம் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் எதனை எதிர்பார்த்தார்களோ, எது பற்றிய அவரது கருத்து நிலைப்பாட்டை பார்த்திருந்தார்களோ, அது பற்றி எதுவும் தெரிவிக்காமல் - மூச்சு விடாமல் - தமது பேச்சை முடித்துக் கொண்டு அவர் புறப்பட்டு விட்டார்.

யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தமிழர்களின் தேசியப் போராட்டம் தொடர்பில் அவரது தீர்வுத் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் வைத்து மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று தமிழர் தரப்பில் சுமந்திரன் பகிரங்க கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால், பொதுத் தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாண மக்களைக் கடைசியாகச் சந்திக்கும் போது கூட அவர்களின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் தமது திட்டம் என்ன, தாம் என்ன செய்யப் போகின்றார், அதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா, அது தொடர்பில் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தான் வழங்கிய உறுதிமொழி தொடர்பில் காத்திரமான செயற்பாட்டை முன்னெடுப்பாரா என்பன போன்ற பல எதிர்பார்ப்புகளோடு தமிழ் மக்கள் காத்திருந்தனர். ஆனால் அவை பற்றி மக்களுக்கு - குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு - வாக்குறுதி ஏதும் அளித்தால், அது தமக்கு தென்னிலங்கையில் வாக்குகளைச் சிதறடித்து விடும் என்ற சிங்கள பெருந்தேசியவாத சிந்தனை காரணமாக அவ்விடயத்தில் மௌனம் பேணி நழுவி இருக்கிறார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

அது மட்டுமல்ல, தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் தமது உத்தேசம் எதனையும் ஜணாதிபதி அநுரகுமார திஸநாயக்க வெளிப்படுத்தவேயில்லை.

நிறைவேற்று அதிகாரம் தம் கைகளில் இருக்கின்றது என்ற மமதை - திமிர் - அவரது நேற்றைய அரசியல் பிரசாரக் கூட்டப் பேச்சில் அப்படியே எதிரொலித்தது. சிங்களப் பெரும் தேசிய வாதத்திடம் வழமையாகத் தமிழர்கள் எதிர்கொண்டு வரும் அனுபவப் பாடம்தான் இது. புதிய ஜனாதிபதி என்ற புது மொந்தையில் வருகின்ற பழைய பேர்வழிகள் வரிசையைச் சேர்ந்தவர்தான் தாம் என்பதை யாழ்ப்பாணத்தில் அநுர குமார திஸநாயக்க நிரூபித்துச் சென்றிருக்கிறார்.

ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படும், அரசியல் கைதிகளின் பிரச்சினை சட்டமா அதிபரின் ஆலோசனையோடு தீர்க்கப்படும் என்றெல்லாம் அவர் வாக்குறுதி தந்தாலும், அவை கூட, தாம் ஆட்சிக்கு வந்ததும் பார் லைசன்ஸ் (உரிமம்) பெற்றவர்களின் பட்டியலை 3 நாள்களில் அம்பலப்படுத்துவேன் என்று கூறிய வாக்குறுதி வகையறாவில் அடங்கி விடுமோ என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு வராமல் இல்லை.

தேர்தல் சமயத்தில் கூட தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கத் திராணி இல்லாத இந்த ஜனாதிபதி, நாட்டின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கும் துணிவுள்ள தலைவராக விளங்குவார் என்று எதிர்பார்ப்பது அபத்தத்திலும் அபத்தம்.



# மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜி.கே. வாசன் வலியுறுத்தல்

மீனவர்களின் மீன்பிடித்தொழில் இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படாமல் இருக்க மத்திய மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

"மத்திய மாநில அரசுகள் தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இலங்கை கடற்படையினர் இராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்க சென்ற 23 தமிழக மீனவர்களை கைது செய்து, அவர்களின் 3 படகுகளையும் பறிமுதல் செய்தனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டதால் மீனவர்கள் மிகுந்த கவலையில் உள்ளனர். உடனடியாக மீனவர்களை மீட்க மீனவக் குடும்பங்கள் கோரிக்கை வைத்துள்ளனர். கடந்த சில மாதங்களாக தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், படகுகளை பறிமுதல் செய்வதும் அதிகரித்துக்கொண்டே போகிறது.

சமீபத்தில் இந்தியா, இலங்கை அரசுடன் தமிழக மீனவர்கள் பிரச்சனை சம்பந்தமாக இலங்கை கடற்படையினரின் அத்துமீறல் குறித்தும், நல்ல தீர்வு காணவும் பேச்சு வார்த்தை நடத்தியது. ஆனாலும் தமிழக மீனவர்களின் பிரச்சனைக்கு இன்னும் நல்ல தீர்வு ஏற்படவில்லை.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடித்தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டு மீனவ சமுதாயம் பொருளாதார ரீதியாக மிகுந்த சிரமத்தில் உள்ளது. எனவே மத்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்தி கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் மீட்க வேண்டும்.

மேலும் மத்திய அரசு தமிழக மீனவர்களின் மீன்பிடித்தொழிலுக்கு நம்பிக்கை கொடுக்கும் வகையில் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கையை முறியடிக்க வேண்டும். மத்திய மாநில அரசுகள் தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழில் இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படாமல் இருக்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் வலியுறுத்துகிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# வரும் தேர்தல்களில் த.வெ.கவுக்கு வெற்றி

## புஸ்ஸி ஆனந்த் நம்பிக்கை

எதிர்வரும் தேர்தல்களில் தமிழக வெற்றிக் கழகத்துக்கு வெற்றி கிடைக்கும் என கட்சியில் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பெரம்பலூரில் கடந்த வெள்ளிக்கு கிழமை இரவு நடைபெற்றது. இதன்போது பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் கருத்து தெரிவிக்கையில்,

"எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் வென்று, தலைவர் விஜய் தலைமையிலான ஆட்சியை அமைக்க கட்சி நிர்வாகிகள் ஒற்றுமையுடன், கடுமையாக பாடுபட வேண்டும்.

இந்த மாதம் நடைபெற உள்ளவாக்காளர் பட்டியலில் திருத்தம் தொடர்பான முகாம்களில் கட்சியினர் பங்கேற்று, விடுபட்ட பெயர்களை சேர்க்கவும், திருத்தம் செய்யவும் உதவ வேண்டும். தலைவர் விஜய் விரைவில் ஒவ்வொரு சட்டப் பேரவைத் தொகுதி வாரியாகச் சென்று தொண்டர்களை சந்திக்க உள்ளார்.

த.வெ.க. தொடங்குவதற்கு முன்பாகவே உள்ளாட்சித் தேர்தலில் 127 இடங்களில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். தற்போது கட்சி தொடங்கப்பட்டுள்ளதால், அனைத்து தேர்தல் களிலும் நிச்சயம் வெற்றி கிடைக்கும்." – என்றார்.

# அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்வு; பங்குச் சந்தை வரலாறு காணாத மாற்றம்





டொனால்ட் ட்ரம்பின் தேர்தல் வெற்றிக்குப் பிறகு அமெரிக்க டொலரின் மதிப்பு வலுப்பெற்றுள்ளதாகவும், பங்குச் சந்தை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 04 மாதங்களின் பின்னர் டொலர் அதன் அதிக பட்ச மதிப்பை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 04 ஆண்டுகளுக்குப் பிறகு, யூரோ டொலருக்கு எதிராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. ஜப்பானிலிருந்து யூரோ மற்றும் சீன யுவான் மதிப்புகளும் சரிந்துள்ளன.

டொலரின் மதிப்பு ஸ்திரத்தன்மையால் தங்கத்தின் விலையும் ஓரளவு குறைந்துள்ளது.

தங்கத்தின் விலை சுமார் 130 டொலர்கள் வரை குறைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்க பங்குச் சந்தை ஒரே இரவில் 2.5 வீதம் உயர்ந்துள்ளது.

# ஜம்மு காஷ்மீர் துப்பாக்கிச் சூடு; இராணுவ அதிகாரி உயிரிழப்பு



காஷ்மீரின் கிஸ்த்வர் மாவட்டத்தில் உள்ள வனப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். 3 பேர் காயம் அடைந்தனர்.

காஷ்மீரின் கிஸ்த்வர் மாவட்டத்தில் கிராம பாதுகாவலர்கள் நசீர் அகமது, குல்தீப் குமார் ஆகியோரை தீவிரவாதிகள் குந்த்வாரா மற்றும் கேஷ்வான் வனப்பகுதிக்கு கடந்த வியாழக் கிழமை கடத்திச் சென்று சுட்டுக் கொன்றனர். அவர்களை தேடும் பணியில் இராணுவத்தினர் மற்றும் போலீஸார் கடந்த சில நாட்களாக ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், குந்த்வாரா மற்றும் கேஷ்வான் வனப்பகுதியில் பார்த் ரிட்ஜ் என்ற இடத்தில், கிராம பாதுகாவலர்களை சுட்டுக் கொன்ற தீவிரவாதிகளின் நடமாட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த இடத்தை இராணுவத்தினரும், காஷ்மீர் பொலிஸாரும் நேற்று காலை 11 மணியளவில் சுற்றி வளைத்தனர்.

அப்போது இரு தரப்பினர் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் இந்திய இராணுவத்தின் 16 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த ஜூனியர் அதிகாரி (ஜே.சி.ஓ) நாயப் சுபேதார் ராகேஷ் குமார் உயிரிழந்தார். மேலும் 3 வீரர்கள் காயம் அடைந்தனர்.







# உக்ரைன் ஆளில்லா விமானத் தாக்குதல் விமான நிலையங்களை மூடியது ரஷ்யா

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள மூன்று விமான நிலையங்களை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உக்ரைன் – ரஷ்யா இடையே போர் பதற்றம் தீவிரமடைந்து வரும் நிலையில் நேற்று உக்ரைன் மேற்கொண்ட ஆளில்லா விமானத் தாக்குதல் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மொஸ்கோ பிராந்தியத்தில் உள்ள டொமோடெடோவோ, ஜ/கோவ்ஸ்கி மற்றும் ஷெரெமெட்டியோ சர்வதேச விமான நிலையங்களே மூடப்பட்டுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டு ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையில் மோதல்கள் ஆரம்பமாகிய பின்னர் மேற்கொண்ட மிகப்பெரிய ஆளில்லா விமான தாக்குதல் இதுவாகுமென குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது, 32 ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி உக்ரைன் இந்த தாக்குதலை நடத்தியுள்ளதுடன் அவற்றை சுட்டு வீழ்த்த ரஷ்ய பாதுகாப்பு படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், தாக்குதல் நிலைமையைக் கருத்தில் கொண்டு, மொஸ்கோவின் ஆபத்தான பகுதிகளில் அமைந்துள்ள 03 விமான நிலையங்களின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளன.

இருப்பினும், ஆளில்லா விமான தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளார் என ரஷ்ய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும், மற்றுமொரு சர்வதேச விமான நிலையமான ஷெரெமெட்டியோ விமான நிலையமும் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.












# துப்பாக்கிகளை மீள கையளிக்காத பிரஜைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை: பாதுகாப்பு அமைச்சு

சிவில் பிரஜைகளிடமுள்ள துப்பாக்கிகளை மீள ஒப்படைப்பது தொடர்பான அறிவுறுத்தல்களை புறக்கணிக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிகளை ஒப்படைப்பது தொடர்பில் மேன்முறையீடு செய்யப்படாத மற்றும் உரிய திகதியில் ஒப்படைக்கப்படாத துப்பாக்கிகள் சட்டவிரோத துப்பாக்கிகளாக கருதப்படுமென அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை வழங்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் அமைச்சின் வசமுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாத நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிவில் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளை ஒப்படைப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 21ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

# நாளை முதல் மீள ஆரம்பிக்கும் தலைமன்னாருக்கான ரயில் சேவை




தலைமன்னாருக்கான ரயில் சேவை 11 மாதங்களின் பின்னர் நாளை முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து தலைமன்னார் வரையிலான முதலாவது தொடருந்து, அன்றைய தினம் மாலை 4:15 இற்கு புறப்படும் என ரயில்வே திணைக்களத்தின் பிரதிப்பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

நேர அட்டவணையின்படி, மேற்படி ரயில் இரவு 9.50 அளவில் தலைமன்னாரை சென்றடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் சிறை அதிகாரி ஒருவர் கைது!

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு விற்பனை செய்வதற்காக ஐஸ் போதைப்பொருளை எடுத்துச் சென்ற சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு விளக்கமறியலில் சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின்படி மேற்கொண்ட விசாரணையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு வருடங்கள் மற்றும் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் பணிக்காக வந்திருந்த 35 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் ஐஸ் போதைப் பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# கொழும்பு துறைமுகத்தில் இந்திய நீர்மூழ்கி கப்பல்





இந்திய கடற்படைக்குச் சொந்தமான 'INS Vela' நீர்மூழ்கிக் கப்பல் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை நேற்றுக் காலை வந்தடைந்துள்ளது.

நீர்மூழ்கிக் கப்பலுக்கு கடற்படை சம்பிரதாயங்களுக்கு அமைய கடற்படையால் வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

'INS Vela' நீர்மூழ்கிக் கப்பல் 67.5 மீற்றர் நீளமானதாகும். இந்த நீர்மூழ்கியில் 53 பணியாளர்கள் உள்ளனர்.

அவர்கள் நாட்டின் முக்கியத்துவம் மிக்க பல இடங்களைப் பார்வையிடவுள்ளனர் என கடற்படை ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

## சுன்னாகம் சம்பவம்:

# தவறிழைத்தோரின் மீது நடவடிக்கை அவசியம்

## மொட்டு வேட்பாளர் கீதநாத் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் சுன்னாகம் பொலிஸாரால் இளந்தாயொருவரும், அவரது பச்சிளம் குழந்தையும் கணவனும் தாக்கப்பட்டனர் எனக் குறிப்பிடப்படும் சம்பவம் தொடர்பில் நான் கவலையடைகின்றமையுடன், இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு தாக்குதல் நடத்தியோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நீதி கிடைக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டி நிற்கின்றேன்.

– இவ்வாறு பொதுஜன பெரமுனவின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் கா.கீதநாத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பலரும் ஆளும் அரசாங்கத்தை கண்டிப்பதைக் காண முடிகின்றது. ஒரு சில அதிகாரிகள் விடும் தவறுகளுக்கு அரசாங்கத்தைக் குறை கூறி பயனில்லை.

இப்படியான சில சம்பவங்கள் எமது பொதுஜன பெரமுன அரசாங்க காலத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. அதன் போது பிழை விடும் அதிகாரிகள் மீது சுமத்த வேண்டிய குற்றச்சாட்டுக்களை அரசாங்கத்தின் மீது சுமத்தினார்கள்.



இந்தத் தாக்குதல் சம்பவத்தில் குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. இது தொடர்பில் உரிய விசாரணை நடத்தி நீதியை நிலை நாட்ட வேண்டும் என்பது எங்கள் கோரிக்கையாக இருக்கின்றது. – என்றார்.

# இனவுணர்வும் பேச்சாற்றலும் மிக்க சயந்தன் பொருத்தமான பிரதிநிதி

**கம்பவாரிதி ஜெயராஜ்**





கேசவன் சயந்தன் எனது நீண்ட நாள் நண்பர். அவரை இம்முறை தமிழரசுக் கட்சி வேட்பாளராகக் களமிறக்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அவர் சென்ற முறையே வேட்பாளராக நிறுத்தப்படவேண்டியவர் என்பது பலருடைய கருத்தாக இருந்திருக்கின்றது. அத்துடன் அவர்தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்கிற எதிர்பார்ப்பும் இருந்திருக்கின்றது. ஆனால் சில பேருடைய தலையீடுகளால் அந்த வாய்ப்பை இழந்திருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டு நான் கவலைப்பட்டுமிருக்கின்றேன்.

சமூகத்தோடு இணைந்து வாழுகின்ற இளையவர்கள் இன்றைக்கு குறைந்துவிட்டார்கள். அதுவொரு பெரிய குறைபாடு. சமூகத்தினுடைய நன்மை தீமைகளில் அதில் தாங்களும் கலந்துகொண்டு, அதில் ஈடுபட்டு, செயற்படுகின்ற இளையோர் தொகை இன்றைக்குமிகக்குறைவாகிவிட்டது. இன்றைக்கு அரசியல் கட்சிகளில் இருக்கின்ற தலைவர்கள், தொண்டர்கள் என அனைவரிடத்திலும் சமூகச் செயற்பாடென்பது பூச்சியமாகத்தான் இருந்து வருகின்றது.

நாங்கள் ஆண்டுதோறும் முத்தமிழுக்கும் விழாக்கள் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் எடுத்து வருகின்றோம். யாழ்ப்பாணத்திலோ, கொழும்பிலோ தமிழுக்காகத் தமிழர்கள் அனைவரும் பெரும்பான்மையாகக் கூடுகின்ற பெருவிழாக்கள் இதுவாகும். அப்படியான தமிழுக்கான பெருவிழாவில் கூட நம்முடைய கட்சித்தலைவர்கள் பல பேரைக் காணமுடிவதில்லை. இதுவொரு பெரிய குறைபாடு என்றே நினைக்கிறேன்.

அமிர்தலிங்கம் போன்ற கூட்டணித் தலைவர்கள் வாழ்ந்த காலத்தில் நான் பார்த்து ரசித்த ஒரு விசயம், அவர்கள் வாழுகின்ற ஊர்களிலே திருமண வீடோ அல்லது மரணச் சடங்கோ இடம்பெற்றால் அத்தலைவர்கள் கட்டயாமாக அங்கே பிரசன்னமாகியிருப்பார்கள். மரணச்சடங்குகளில் கலந்துகொள்ளும் தலைவர்கள், அந்தச் சடலம் மயானத்திற்குப் போகும்வரைக்கும் அவர்களும் இறுதி ஊர்வலத்தோடு நடந்து போவதை நான் பார்த்திருக்கின்றேன். இன்றைக்கு அந்த நிலைமை இல்லை. எல்லோரும் ஒப்பரிகையில் இருந்துகொண்டு தலைவர்களாகப் பார்க்கிறார்கள். கேசவன் சயந்தன் அதிலிருந்து விதிவிலக்கானவர் என்பது என்னுடைய கருத்து.

எல்லோருடைய இன்ப துன்ப நிகழ்வுகளிலும் சயந்தனுடைய பங்களிப்பு இருக்கும். அல்லது அந்த நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டிருக்கிறார் என்கிற செய்தியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த ஊரோடு தொடர்பிருக்கின்றபடியால் நானறிந்த செய்தி இது.

கம்பன் கழகம் என்கிற வகையில், கம்பன் கழகம் நடத்துகின்ற எல்லா விழாக்களிலும் சயந்தனுடைய பங்களிப்பு இருந்திருக்கின்றது. நான் அந்தப் பங்களிப்புக்காக இதைப் பேசுகின்றேன் என்று நினைக்காதீர்கள். சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையால், நன்றியுடைமையோடு அதனைச் சொல்லத் தலைப்படுகின்றேன். நாங்கள் விழாக்கள் நடத்தப் பொருளாதார ரீதியில் கஷ்டப்படும்போதெல்லாம் அவர் கைகொடுத்திருக்கிறார். அது மட்டுமல்ல, எங்கள் எல்லா விழாக்களிலும் அவருடைய பிரசன்னத்தை நான் பார்த்திருக்கிறேன். தனக்கொரு முக்கியத்துவத்தைத் தேடாது, விழா அரங்கின் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்து, விழாவின் பேசுபோருளைக் கேட்டுப் போகும் தன்மையினைப் பார்த்திருக்கிறேன்.

இன்றைக்கு, பெரும்பான்மையான கட்சிகளிலும் இப்படியான இளையோர்கள் இல்லாமல்தான் இருக்கிறார்கள். தேர்தல் என்றால்தான் அவர்களை முகம்காணக் கூடியதாக இருக்கின்றது. கேசவன் சயந்தனைப் பொருத்தவரையில், அந்தத் தகுதியைப் பார்த்து நான் மகிழ்ந்திருக்கிறேன். மக்களோடு மக்களாக வாழுகின்ற, ஓர் இனத்தின் பிரதிநிதியாக செயற்படுகின்ற அந்தத் தன்மை எனக்கு மிகவும் பிடிக்கும்.

அரசியலில், இம்முறை அவருக்கு இந்த வாய்ப்புக் கொடுக்கப்பட்டமைக்குரிய நியாயம் என்னவென்றால், நான் ஓர் அறைக்குள்ளே இருந்துகொண்டு உலகத்தைப் பார்க்கின்றவன். அதனாலே சொல்கிறேன். இன்றைக்கு பரந்து விரிந்த. விட்ட ஊடகத் தளங்களில், கேசவன் சயந்தனுடைய நேர்காணல்களைப் பார்க்கிறேன். தலைவர் எனச் சொல்கின்றவர்களுக்கு அந்தப் நேர்காணல்களுக்கு முகங்கொடுக்கத் தெரியவில்லை.

நம்முடைய திருவள்ளுவர் திருக்குறளிலே, பொருட்பால் என்று அரசியல் பற்றி பேசுகின்ற இடத்திலே, மந்திரிக்கு முதல் அதிகாரமாக சொல்வண்மையை வைக்கிறார். வார்த்தை வண்மையைப் பயன்படுத்தத் தெரிந்தவனால்தான் அரசியலில் நிமிர்ந்து நிற்க முடியும் என்று திருவள்ளுவர் சொல்லுகின்றார். அந்த வகையில் நான் இந்த நேர்காணல்களைப் பார்க்கும்போதெல்லாம் கவலைப்படுவேன். தலைவர்கள் பலர், நேர்காணல் என்று வந்துவிட்டு, கேள்விகளுக்கு முகங்கொடுக்க முடியாமல், சிந்திக்கின்ற எண்ணத்திற்கு பதில் கொடுக்க முடியாது வார்த்தைகளிலே குழம்புவார்கள். இப்படியான நிலையில், அடுத்தடுத்து கேசவன் சயந்தனுடைய இரண்டு, மூன்று நேர்காணல்களைப் பார்க்க

# இனவுணர்வும் பேச்சாற்றலும் மிக்க சயந்தன் பொருத்தமான பிரதிநிதி



முடிந்தது. அதனைப் பார்த்து நான் உண்மையிலேயே மகிழ்ந்தேன். இது தேர்தல் காலத்திலே நடந்த விடயமல்ல. இன்றைக்குப் சில காலத்திற்கு முன்னர் நான் பார்த்த அவரின் நேர்காணல் பற்றி குறிப்பிடுகின்றேன். சயந்தனுக்கே அதனைச் சொல்லிப் பாராட்டினேன். கேள்வியொன்றைக் கேட்டால் சரியான முறையிலே முகங் கொடுக்க அவருக்குத் தெரிகின்றது. தான் எடுத்துக்கொண்ட விடயத்தில் தெளிவாகவும், சுருக்கமாகவும் விவ்ரிக்கின்ற அவரின் ஆற்றலைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். இன்றைக்கு இத்தகைய இளந் தலைவர்கள் நமக்குத் தேவை.

நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி பேசுகின்ற தலைவர்களின் பேச்சுத்தான் ஓர் இனத்தினுடைய கருத்தாக ஏற்றுக் கொள்ளப்படும். ஆகவே ஓர் இனத்தினுடையபிரதிநிதிகளாகஇருக்கின்றவர்கள் பேசுகின்ற தகுதி பெற்றிருக்க வேண்டும். தான் நினைத்த கருத்தை சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். வெறுமனே வார்த்தைகளைச் சொல்லாமல், அது அவர்களுடைய உணர்வு சார்ந்த விசயமாகவும் இருக்க வேண்டும். சயந்தனைப் பொறுத்தவரையில், மக்களோடு மக்களாக வாழ்ந்ததோ என்னவோ தெரியவில்லை, நம் இனம் பற்றிய உணர்வு அவரிடம் நிறைய இருக்கின்றது. அந்த உணர்வைத் தெளிவாக வெளிப்படுத்துகின்ற ஆற்றல் அவரிடம் இருக்கின்றது. மக்களுடைய இன்பதுன்பங்களில் கலந்துகொள்கின்ற அந்த மனப்பாங்கு இருக்கின்றது. இவையெல்லாம் இருக்கிறவர்கள் இன்றைக்கு மிகக்குறைவானவர்களாகத்தான் இருக்கிறார்கள். விரல்விட்டு எண்ணக்கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேன், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவருக்கு தமிழரசுக் கட்சி கொடுத்திருக்கும் வாய்ப்பு மிகப்பொருத்தமானது என்றே கருதுகின்றேன். அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரின் ஆற்றல் மேலும் ஒளிர்விடும் என நான் நம்பிக்கை கொள்கின்றேன். ஆகவே நம் இனம் சார்பாக சொல்கிறேன், அனைத்து மக்களும் அவருக்கு ஆதரவளித்து அவரை வெற்றிபெறச் செய்ய வேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

# நேர்மை, இனப்பற்று, சேவை மனப்பாங்கு மூன்று பண்புகளும் மிக்கவர் சயந்தன்

## அத்தகையவரைத் தெரிவு செய்வதுதான் பொருத்தம்

**பேராசிரியர். பத்மநாதன்**



கேசவன் சயந்தன் கடந்த சில வருடங்களாக எனக்கு நன்கு அறிமுகமானவர். மிகவும் ஆர்வத்தோடு, பற்றுறுதியோடு செயலாற்றக்கூடியவர். தமிழரினுடைய நிலவுரிமைகள், வழிபாட்டு உரிமைகள், இந்துக்கோயில்களினுடைய உரிமைகள் முதலியவற்றுக்கு எதிராகத் திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகள் நாசிசப் பாங்கிலான நடவடிக்கைகளை மேற்கொண்டபொழுது, பல நூற்றுக்கணக்கான வழக்குகளிலே ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சுமந்திரனோடு கூடியிணைந்து நீதிமன்றங்களில் வாதாடி வெற்றி பெற்று, அந்த உரிமைகளை மக்களுக்கு வென்று கொடுப்பதில் இவருடைய பங்கு கணிசமானதாகும். அது எல்லோரதும் பாராட்டுதலுக்குரியது.

இதனை நீங்கள் மனதிற் கொண்டு, எதிர்காலத்திலும் இவ்வாறான பணிகளில் அவர் ஈடுபடுவதற்கு அவரைப் பயன் படுத்தவேண்டுமானால், அவருக்கு அமோகமான ஆதரவினை வழங்க வேண்டும்.

தமிழ் தேசிய அரசியலுக்கு தேவையான விடயங்களில் ஒன்று நேர்மை. இரண்டாவது தமிழ் சமுதாயத்தின் மீது கொண்டுள்ள பற்று. மூன்றாவது சேவை புரிகின்ற ஆர்வம். இந்த மூன்று பண்புகளும் கேசவன் சயந்தனிடம் தாராளமாக இருக்கின்றன. அத்தோடு கட்சிக்கும், தலைமைக்கும் விசுவாசமாக இருக்கின்ற ஒருவரைத் தெரிவு செய்வதுதான் இப்போது அவசியமாக இருக்கின்றது.

# சமய நல்லிணக்கத்துக்காக செயலாற்றுபவர் சயந்தன்

## திருக்கேதீச்சர ஆலய சபை பிரதிநிதி புகழாரம்





**- திருமதி.அபிராமி கைலாசபிள்ளை -**
**[பிரதித் தலைவர், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை]**

திருக்கேதீச்சர ஆலய அலங்கார வளைவை உடைத்தமைக்கு எதிராக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கிலும், மன்னார் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று நிறைவுற்ற வழக்கிலும், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், சட்டத்தரணி கேசவன் சயந்தன் அவர்களும் முன்னிலையாகி வழக்காடி வருகின்றனர். இது சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஒரு செயலாகும். அதற்காக பாடுபட்டு வரும் இவர்கள் இருவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# தடுப்புக் காவல் போராளிகளுக்கு துணிந்து நின்று உதவிய சயந்தன்

## முன்னாள் போராளி நன்றியுணர்வுடன் தெரிவிப்பு



**மாணிக்கம் சிறீஸ்கந்தராஜா (மந்துவில்)**

நான் ஒரு முன்னாள் போராளி. எங்களை பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். அதில் ஆயிரக் கணக்கானவர்களை விடுதலை செய்து கொழும்பு நீதிமன்றத்தற்கு அழைத்துச்சென்றனர். கொழும்பு நீதிமன்றத்தில், எல்லோருக்கும் புனர்வாழ்வளிக்கவேண்டும் எனத் தெரிவித்து, எங்களுக்கு கைவிலங்கிட்டு, புனர்வாழ்வு நிலையங்களுக்கு கொண்டு செல்ல தயாரான போது, அந்நேரத்தில் கேசவன் சயந்தன் அவர்கள்தான் தனியொருவராக வருகை தந்து, எங்களுக்காக வாதாடினார்.

அவ்விடத்திலிருந்து 600இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் உடனடியாக விடுவிக்கப்படுவதற்காக கேசவன் சயந்தன் அவர்களே வாதாடினார். அவரின் சட்ட உதவியினால் அன்றைய தினமே விடுதலைப் புலிகள் அமைப்பில் கலைசார்ந்த பணிகளில் ஈடுபட்டிருந்த 600இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டோம். இதற்காக நாம் என்றைக்கும் அவருக்கு நன்றிக் கடன்பட்டவர்களாகவுள்ளோம்.

அன்றயை நாளில் போகுமிடம் தெரியாது தத்தளித்துக் கொண்டிருந்தோம். அந்நேரத்தில் எங்களுடன் வந்து கதைத்து, கைகொடுத்து உதவியவர் கேசவன் சயந்தன் சட்டத்தரணி அவர்கள் தான். அதனை நாம் எப்போதும் மறக்கமாட்டோம்.

அன்றிலிருந்து இன்றுவரை என்ன உதவி வேண்டுமெனிலும், அவரைத்தான் நாடுகின்றோம். அவரும் முகஞ்சுழியாது எங்களுக்கான உதவிகளைப் புரிந்து வருகின்றார்.

ஆகவே இம்முறை இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்தில் இலக்கம் மூன்றில் போட்டியிடும் கேசவன் சயந்தன் அவர்களுக்கே எமது ஆதரவினை வழங்குவோம்.



நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு!
ஊழலற்ற தூய கரங்கள்!!
3
சட்டத்தரணி
கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்)
அறிவு - ஆற்றல் - ஆளுமை




Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.



# தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கலாம்; ஆயினும் வட - கிழக்கில் தெரிவு செய்தல் பொருத்தமற்றது

- ந.சதாசிவ ஐயர் -

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடைந்துள்ளது. ஆனால் அந்த வெற்றி சாதனை படைத்த பெரு வெற்றியல்ல. ஏனைய ஜனநாயக கட்சிகள் மீது மக்கள் கொண்ட வெறுப்பே இவ்வெற்றிக்குக் காரணம்.

என்னைப்போன்று தென்னிலங்கை எங்கும் கடமை புரிந்தவர்களுக்கும் நண்பர்களைக் கொண்டவர்களுக்கும் மட்டுமே அது நன்றாக புரியும். பல தரப்பையும் சேர்ந்த பெரும்பான்மை மக்களிடம் நட்பு ரீதியாகத் தேர்தலின் முன்பான கருத்தறிந்த என் போன்றவர்களுக்கே அது நன்றாக விளங்கும். ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு நடந்த பிரதேச சபை தேர்தலில் மாற்றம் ஏதும் நிகழவில்லையே. அறுதிப் பெரும்பான்மையோ, பெற்ற மொத்தவாக்குகளில் மிகப்பெரிய மாற்றமோ கிடைக்கவில்லையே? அங்கே பெருமைப்படக் கூடிய மாற்றம் ஒன்றும் நிகழவில்லையே? பிரதேச சபைத் தேர்தல் தனி நபர் ஆதரவு எனும் சமாதானம் இங்கு ஏற்புடையதாகும் எனின் நாடாளுமன்றத் தேர்தலிலும் அது எதிரொலிக்கலாம் அல்லவா?

ஆதனால்தான் அவர்கள் மலையகம் மற்றும் மேற்கு மட்டுமின்றி வடக்கு, கிழக்கிலும் அதிக கவனம் செலுத்துகின்றனர். எங்கே தங்கள் வார்த்தைப் பிரயோகம் தென்னிலங்கையிலே திசை மாற்றி விடுமோ எனும் அச்சத்தில் எதையும் அளவாக கதைக்கின்றனர். அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலர் வீர வசனமும் பேசுகின்றனர். அவ்வளவுதான்.

இதையறியாத வடக்கில் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுபவர்களும் இளைஞர்களும் "மாற்றம்", "மாற்றம்" எனும் மயக்கத்தில் துள்ளுகின்றனர்.

தென்னிலங்கையில் பாலும் தேனும் ஓடுகிறது, வடக்கு, கிழக்கில் தான் எதுவும் இல்லை என்பவர்கள் தெற்கில் சுற்றுலா செல்பவர்களே. அங்கு கிராமங்களுக்கும் காடு மலைகளுக்கும் சென்று பாரத்தால்தான் தெரியும் அங்கும் மக்கள் எத்தனை கஷ்டத்தில் வாழ்கிறார்கள், எவ்வளவு பிரச்சினைகளை ஏதிர் நோக்கு கின்றார்கள் என்பது. சக்தி டி.வி. செய்தி பார்ப்பவர்களுக்கு ஓரளவு தெரியும் அங்கே கிராமங்கள் படும்பாடும் அவர்கள் கம்மெத்த மூலம் செய்யும் சிறு உதவிகளும்.

அங்கும் தொழில் வாய்ப்பின்மை, பட்டதாரிப் பிரச்சினை, காணாமற் போனோர் பிரச்சினை, போராட்டங்கள், வலுவிழந்த இராணுவத்தினரின் போராட்டங்கள்.... இப்படி அநேகம் உண்டு. தமிழ் ஊடகங்களில் அவை வராமையினால் நாம் அறிவதில்லை. அங்கும் வெளிநாட்டுக்கு வேலை தேடிச்செல்வதும் புலம் பெயர்வதும் ஓரளவில் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

ஆனால் அங்கு வாழ்ந்து, அவர்களுடன் நெருங்கி பழகியவன் என்பதால் சுருக்கமாகச் சொல்கிறேன். அவர்களுடைய வாழ்க்கை கலாச்சாரத்துக்கும் எமக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.

எங்களுடைய களத்திலும் நல்லவை பல மெல்ல மெல்ல நடக்கின்றன. காலத்தால் சிறப்புறும்.

காணி விடுவிப்பு, பாதை திறப்பு அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக நடந்தன. நடக்கின்றன. நடக்கும். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் வடக்குக. கிழக்கில் அனைத்துக் காணிகளும் விடுபடும் என நம்புவது பொருத்தமானதல்ல. அவர்களும் இராணுவ நலன் பாரத்துப் படிப்படியாகத்தான் செயற்படுவர். அதேபோல்தான் ஏனைய நடவடிக்கைகளும் இருக்கும்.

என்.எம்.பெரேரா ஆட்சிக்காலம் நாம் நன்கறிவோம். கம்யூனிச ஆட்சிக் காலத்தையும் கொஞ்சக் காலம் கண்டனுபவித்தவர்கள் நாங்கள்.

ஆதலால் தேசிய மக்கள் சக்தி அவர்களின் பலத்தினால் – பெரும்பான்மையினால் – வரட்டும். அரசமைக்கட்டும். நல்லவை பல செய்யட்டும். நாட்டை வளமாக்கட்டும். எல்லோரையும் சமமாக மதிப்பவர்கள் என்றால் ஒரே நாடு ஒரே மக்கள் என சமமாக மதித்து, சம உரிமை கொடுத்து, நாம் வாக்களிக்காமலேயே எமக்கும் சேவை செய்யட்டும். தமிழர் பகுதிகளின் தனித்துவத்துக்கு மதிப்பளிக கட்டும். அதன்பின் முழுமையான ஆதரவு வழங்குவோம். (அவர்களில் மாவட்டத்துக்கு ஒருவர் வீதம் தெரிவு செய்து அனுப்புவோமாயின் அவர்கள் அவ்வரசின் கட்டுப்பாட்டுக்கமைய பின்வரிசை ஆசனங்களை நிரப்பலாம் அல்லது ஒருவர் பெயருக்கு அமைச்சராகலாம். அன்றி எண்மரும் ஒரு சேர்ந்து வடக்கு – கிழக்கு தமிழருக்காகத் தனித்தியங்க வாய்ப்பில்லை)

அதுவரை அமைதி காப்பதும் தனியாக வடக்கு – கிழக்கு, மலையகம் மற்றும் தமிழ்பேசும் மக்கள் என உருவெடுப்போம். வெளியிலிருந்து ஒற்றுமையாக அவதானித்து தேவையானபோது ஒத்துழைக்கக் கூடிய, – சேர்ந்து பயணிக்கக்கூடிய – சுட்டிக்காட்டவேண்டிய நேரத்தில் சுட்டிக்காட்டக் கூடி. – முடியாத போது நீதி வழியில், அகிம்சாவழியில் செயற்படக்கூடிய – ஒரு கட்சியை வடக்குக் கிழக்கில் தந்தை செல்வா காட்டிய வழியில் செல்ல வைப்போம். வெல்ல வைப்போம்.



# தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும்?



புருஜோத்தமன் தங்கமயில்

பொதுத் தேர்தல் வாக்களிப்புக்கு இன்னும் இருப்பது மூன்று நாள்கள் மட்டுமே. இன்று திங்கட்கிழமை நள்ளிரவோடு பிரசசாரப் பணிகள் நிறைவுக்கு வருகின்றன. அடுத்த இரண்டு நாள்கள் அமைதிக் காலம். பொதுத் தேர்தல் அறிவிப்பு முதல் வேட்புமனுத் தாக்கல் செய்யும் நாள் வரையில்தான், நாடு மீண்டுமொரு பிரதான தேர்தலை எதிர்கொள்ளப் போகின்றது என்ற பரபரப்பு காணப்பட்டது. ஆனால், அதன் பின்னரான காலம் முழுவதும் பெரும்பாலும் பிரச்சார அமைதிக் காலம் மாதிரி எந்த வித ஆர்வமும் அக்கறையுமின்றியே தொடர்ந்தது. ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொண்டதுபோலவே, பொதுத் தேர்தலிலும் வென்று ஆட்சியைப் பிடிப்போம் என்ற நம்பிக்கையோடு இருக்கும் தேசிய மக்கள் சக்தி மாத்திரமே நாடு முழுவதும் பிரசாரக் கூட்டங்களை நடத்தியிருக்கின்றது. அந்தக் கட்சியுங்கூட ஜனாதிபதித் தேர்தலில் நடத்திய பெரும் எடுப்பிலான கூட்டங்கள் போலல்லாது, ஒப்பீட்டளவில் சிறிய கூட்டங்களையே நடத்தியிருக்கின்றது.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தளவில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்துகிறார்களா என்று கேள்வி எழுப்பும் அளவிலேயே நிலைமை இருக்கின்றது. மனதளவில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதற்கு தயாராகிவிட்டு தேர்தலை எதிர்கொண்டால், நிலைமை இப்படித்தான் இருக்கும். கடந்த பொதுத் தேர்தலில் ராஜபக்ஷக்கள் நிச்சயமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அண்மித்த வெற்றியைப் பெறுவார்கள் என்று நம்பப்பட்ட நிலையிலும்கூட எதிர்க்கட்சிகள் பெரும் எடுப்பிலான பிரசாரக் கூட்டங்களை நடத்தின. தேர்தலை பொதுஜன பெரமுனவுக்கான களமாக மாற்றிவிட்டு ஒதுங்காமல், இறுதி வரையில் போட்டிக்களமாகவே வைத்துக் கொள்வதற்காக போராடின. ஆனால், இந்தப் பொதுத் தேர்தல் பெரும் அசண்டையீனத்துடன் அணுகப்படுகின்றது. இதன் பிரதிபலிப்புக்களையே வடக்குக் கிழக்கு தேர்தல் களமும் அப்பட்டமாக காட்டுகின்றது.

இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் எப்படி அணுகுகிறார்கள் என்பது தொடர்பில், யாருக்கும் எந்தத் தெளிவும் இல்லை. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எந்தவிதப் புரிதலும் இல்லை. ஒரு குழப்பமான நிலையில் நின்றுதான் விடயங்களை அணுகுகின்றன. அதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உண்டு. அதில், முதலாவது, வழக்கத்துக்கு மாறாக தென் இலங்கையின் ஆட்சியை மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) புதிய முகமான தேசிய மக்கள் சக்தி கைப்பற்றப் போகின்றது எனும் நிலை. இரண்டாவது, தமிழ்த் தேசியக் கட்சிகள் வாய்ப் பேச்சில் காட்டும் ஆக்ரோசத்தை செயற்பாட்டில் காட்டுவதில்லை என்கிற தொடர் ஏமாற்றம். மூன்றாவது, தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள், ஆளுமைகள் என்று தங்களை முன்னிறுத்தும் தரப்பினர், தமிழ் மக்களிடம் நம்பிக்கையை அவசர கதியில் கோரி, அதனை தோல்விகளில் முதலிடுவது. அதற்கான அண்மைய உதாரணம் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயமும், அதன் வழியாக நிகழ்த்தப்பட்ட சங்குச் சின்னத்தின் அபகரிப்பும், அறமற்ற அரசியலும்.

ராஜபக்ஷக்கள் இந்தத் தேர்தல் களத்தில் இல்லை. அதனால் ஆட்சி பற்றிய உரையாடல்களில் அவர்கள் வரவே மாட்டார்கள். அதனால், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தேர்தலை எந்தப் புள்ளியில் நின்று எதிர்கொள்வது என்பதில் பெரும் நெருக்கடியைச் சந்திக்கின்றன. முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னரான அனைத்துத் தேர்தல்களையும் ராஜபக்ஷக்களுக்கு எதிரான கட்டத்தில் இருந்துதான், தமிழ்த் தேசிய அரசியல் களம் எதிர்கொண்டது. கடந்த ஜனாதிபதித் தேர்தலைக் கூட 'ரணில் ராஜபக்ஷ' என்ற கட்டத்தில் வைத்துத்தான் பருமட்டாக எதிர்கொண்டது. ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ போட்டியிட்ட போதிலும், அவரைத் தாண்டி அப்போதைய ஜனாதிபதியான ரணில் மீது ராஜபக்ஷ அடையாளம் அதிகமாக இருந்தது. அதன் பேரில், அவரைத் தோற்கடிக்க வேண்டும் என்று களம் விரிந்தது. அவருக்கு ஆதரவளிக்கும் வெளிப்படையான மற்றும் மறைமுகமாக தேர்தல் திட்டங்களை தமிழ் மக்கள் தோற்கடிக்க வேண்டும் என்ற கோசம் பெருமெடுப்பில் எழுந்தது. அதனால்தான், வடக்குக் கிழக்கில் ரணிலின் சிலிண்டர் சின்னமும், சங்குச் சின்னமும் தோற்கடிக்கப்பட்டன. ஆனால், இந்தப் பொதுத் தேர்தலில் ராஜபக்ஷக்கள் இல்லை. கடந்த பதினைந்து ஆண்டுகளாக தேர்தல்கள் என்று எது வந்தாலும், அந்தத் தேர்

தொடர்ச்சி ▼

# தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும்?

தொடர்ச்சி ▲

தல்களை ராஜபக்ஷக்களுக்கு எதிரான நிலையில் நின்றுதான், தமிழ்த் தேசிய அரசியல் களம் அணுகி வந்திருக்கின்றது. ராஜபக்ஷக்களின் தமிழர் விரோத ஆட்சியும் நடவடிக்கைகளும் அதற்கான காரணங்களாகத் தொடரவும் செய்தன.

தற்போது, பிரதான எதிரியை அடையாளம் காணுவதில் தமிழ் அரசியல் களம் தடுமாறுகிறது. தென் இலங்கையின் பெரும்பான்மை வாதமும் அதன் வழியாக தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்டுவந்த பேரினவாத சிந்தனையும்தான் தமிழ் மக்களின் பிரதான எதிரி என்பதை தெளிவாக முன்னிறுத்தி அரசியலைச் செய்வதற்கு தமிழ்த் தேசியக் களம் இப்போது பின்னடிக்கின்றது. அதற்கு, கடந்த இரண்டு தசாப்த காலத்தில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக மாத்திரம் சுருங்கிவிட்ட எதிர்ப்பு மனநிலையும் கூட காரணமாகும். பேரினவாத சிந்தனையை யார் அதிகமாக பிரதிபலிப்பது என்பது தொடர்பில்தான் தென் இலங்கையின் கட்சிகளுக்கு இடையில் அதிகாரத்துக்கான போட்டி இருந்திருக்கின்றது. ஐ.தே.க.வுக்கு எதிராக பண்டாரநாயக்க தூண்டியதும், சிறிமாவுக்கு எதிராக ஜெயவர்த்தன தூண்டியதும் பேரினவாதத்தைத்தான். இடைக்கிடை சமாதான வேடதாரிகளும், நல்லாட்சி நாடகங்களும் அரங்கேற்றப்படுவதுண்டு. அவற்றின் அதிகபட்ச ஆயுட்காலம் ஓரிரு ஆண்டுகள் மாத்திரமே. மீண்டும் தென் இலங்கை பேரினவாதத்தின் பக்கத்தில் சென்றுவிடும். சமாதான தேவதை வேடத்தோடு ஆட்சி பீடமேறிய சந்திரிக்கா, அதனை ஓரிரு மாதங்களில் கலைத்து, போர் முகங்கொண்டு ஆட்சியை நடத்தினார். மைத்திரி– ரணில் நல்லாட்சிக் காலத்திலும், பேரினவாதம் காலைச் சுற்றிய பாம்பாக நிலைகொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்த போது, மைத்திரி ராஜபக்ஷகளோடு பின்வழியாக உறவைப் பேணினார். அவர்களை அதிகாரத்துக்கு கொண்டுவர எத்தனித்தார்.

இப்போது, தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்திருக்கின்றது. அவர்கள், இதுவரையில், சில மாதங்கள் சந்திரிகாவின் ஆட்சியின் பங்குதாரர்களாக இருந்திருக்கிறார்களே அன்றி, தனித்த ஆட்சி அதிகாரத்தை நடத்தியவர்கள் அல்லர். அதனால், தங்களின் மீது புரட்சி, புதிய மாற்றங்கள் என்கிற சாயத்தை இலகுவாக பூசிக் கொள்ள முடிந்திருக்கின்றது. அதனை, பெரும் நம்பிக்கையாக தமிழ் மக்களின் ஒரு பகுதியினரும் நம்பத் தலைப்படுகிறார்கள். அதற்காக, தமிழ்க் கட்சிகளைப் புறக்கணித்து, தேசிய மக்கள் சக்தியின் மீது பந்தயம் கட்டுவதற்கும் தயாராக இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் சில நாள்களுக்கு முன்னர், புத்திஜீவிகள், கல்வியாளர்கள் குழாம் ஒன்று, தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவினை வெளிப்படையாக அறிவித்திருக்கின்றது. ஆனால், அந்தக் குழுவிடம் தமிழ் மக்களின் அரசியல் உரிமை, விடுதலை மற்றும் அதற்கான தீர்வு தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் செயற்திட்டங்கள் என்ன என்பதற்கான எந்தவித தெளிவும் இல்லை. அது தொடர்பில் கேள்வி எழுப்பினால், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்துத்தான் தாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம், மற்றவை தொடர்பில் தாங்கள் பொறுப்புக் கூற வேண்டியதில்லை என்று நழுவிச் செல்கிறார்கள். அரசியலில் பொறுப்புக் கூறல் என்பது அடிப்படையானது. அதனை செய்வதற்கு அனைவரும் தயாராக வேண்டும். அதுவும், தொடர் பேரினவாத அடக்குமுறைகளுக்கு உள்ளாகும் மக்கள் கூட்டத்துக்குள் இருந்து, அடக்குமுறையை பிரயோகித்து வந்த அணியின் கூறுகளாக இருந்தவர்களை ஆதரிப்பதற்கான காரண காரியங்களை தெளிவுபடுத்த வேண்டியது அடிப்படை. ராஜபக்ஷக்கள் என்ற பெரிய எதிரியைத் தோற்கடிப்பதற்காகக் கடந்த காலங்களில் அதற்கு எதிரான தென் இலங்கையின் அணிகளை தமிழ் மக்கள் ஆதரித்து வந்திருக்கிறார்கள். அது, பெரிய எதிரியை தோற்கடிக்கும் உத்தி சார்ந்தது. அதனை அந்த முயற்சிகளில் ஈடுபட்ட கட்சிகளும், தலைவர்களும்கூட வெளிப்படையாக அறிவித்தே செய்திருக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை ஆதரிப்பதற்கான அறிவித்தலை விடுத்தமைக்கான நியாயப்பாடுகளைக் கூட ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடியும். ஆனால், பொதுத் தேர்தல் போன்ற, இனத்துவ பிரதிநித்துவமும் அதன் வழியாக அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான சூழலும் காக்கப்பட வேண்டிய கட்டத்தில், அதனைப் புறந்தள்ளிக் கொண்டு, புதிய மாற்றக் கோசத்துக்குள் கரைந்து போகக் கோருவது எந்த அடிப்படையிலானது?

தேசிய மக்கள் சக்தியை நோக்கி திரட்சியைக் கோரும் தமிழ்ப் புத்திஜீவிகள், திடீர் புரட்சியாளர்கள் மற்றும் மிதக்கும் வாக்காளர்கள், தேசிய மக்கள் சக்தியின் தீர்மானங்களை எடுக்கும் தலைமை தொடர்பிலான தெளிவோடு இருக்கிறார்களா என்கிற சந்தேகம் எழுகின்றது. அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்று ஒன்றரை மாதங்கள் நிறைவடையவில்லை. அதற்குள், தேசிய மக்கள் சக்தியினர், கடந்த ஐந்து ஆண்டுகளில் பேசி வந்த அரசியலுக்கும், அவர்களின் ஆட்சிக்கும் இடையில் பாரிய இடைவெளியைப் பதிவு செய்கிறார்கள். கடந்த காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை முழுமையாக நீக்க வேண்டும் என்று பேசி வந்த, அவர்கள், இப்போது அந்தச் சட்டத்தினை அப்படியே வைத்துக் கொள்வதில் குறியாக இருக்கிறார்கள். அத்தோடு, மாகாண சபைகள் முறையை ஒழித்தல், சமஷ்டிக் கோரிக்கை நிராகரிப்பு, தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித இனத்துக்கு விரோதமான குற்றங்களையும் யுத்த குற்றங்களையும் தண்டித்தல் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறைகளை அனுமதிக்காமை என்கிற நிலைகளையே, அவர்கள் தெளிவாகப் பிரதிபலிக்கிறார்கள். குறிப்பாக, ரில்வின் சில்வா, விஜித ஹேரத் போன்ற, ஜே.வி.பி.யின் முடிவெடுக்கும் தலைமை, அதில் தெளிவாக இருக்கின்றது. அப்படியான நிலையில், முடிவெடுக்கும் அதிகாரமற்ற ஹறிணி அமரசூரிய போன்றவர்களை காட்டி, தேசிய மக்கள் சக்தியில் நம்பிக்கைக் கொள்ளக் கோருவது சரியான அரசியல் முடிவல்ல.

தமிழ்த் தேசிய அரசியல், தென் இலங்கையில் பேரினவாத சிந்தனை இருக்கும் வரையில் காப்பாற்றப்பட வேண்டியது. அப்படியான சூழலில் தமிழ் மக்கள் தங்களின் வாக்குகளை கவனக் கலைப்பான்களின் மீது முதலீடு செய்வது ஆபத்தானது. தேசிய மக்கள் சக்தி அப்படியானதொரு ஆபத்தான கவனக் கலைப்பான். அந்தக் கட்சியின் தமிழ் பிரதிநிதி ஒருவர் தெரிவானாலும், அவரினால் அந்தக் கட்சியின் நிலைப்பாடுகளுக்கு மாறாக நின்று ஒருபோதும் செயற்பட முடியாது. அப்படிச் செயற்பட்டால் அவர்களை கட்சியை விட்டு நீக்கி, பதவியைப் பறித்துவிடுவார்கள். தமிழ் மக்களின் முதல் தெரிவாக தமிழ்த் தேசியக் கட்சிகள்தான் இருந்தாக வேண்டும். நிறைய நம்பிக்கையீனங்களும் விமர்சனங்களும் தமிழ்த் தேசியக் கட்சிகள், அதன் தலைவர்கள் மீது

தொடர்ச்சி ▼

# தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும்?

தொடர்ச்சி▲

இருக்கின்றன. ஆனால், தமிழ்த் தேசிய அரசியலை அதன் பெயரினால் புறக்கணிக்க முடியாது. ஏனெனில், கட்சிகளுக்குள் தலைவர்கள் வருவார்கள் போவார்கள். ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் காக்கப்பட வேண்டும். அதில் மக்கள் தங்களின் பொறுப்பை நிறை வேற்றியாக வேண்டும்.

வடக்குக் கிழக்கு பூராவும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளை நோக்கி வாக்களிக்க வேண்டும். அதிலும், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் தவிர்ந்து அனைத்து தமிழ் மாவட்டங்களிலும் தமிழரசுக் கட்சியை நோக்கியே தமிழ் மக்கள் வாக்களிப்பது சரியான உத்தியாக இருக்கும். ஏனெனில், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறையில் தமிழ் வாக்குகள் சிதறுவதால், தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகமுண்டு. சுயேச்சைக் குழுக்கள், சிறிய பலமற்ற கட்சிகளுக்கு வாக்களிப்பது என்பது, வாக்குச் சிதறலை செய்து பிரதிநிதித்துவ இழப்பை செய்துவிடும். அதன் பலனை பெரும்பான்மைக் கட்சிகள் அறுவடை செய்யும். யாழ்ப்பாணத்துக்குள் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை நோக்கிய வாக்களிப்பு இருப்பது ஓரளவுக்கு ஆரோக்கியமான விடயமாக இருக்கும். ஏனெனில், சங்குக் கூட்டணியாக அண்மையில் தோற்றம் பெற்றவர்களிடம் தமிழ்த் தேசியத்துக்கான கூட்டுப் பொறுப்போ, சிறிய அறமோ இல்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் காணப்பட்ட இணக்கப்பாட்டை, தேர்தல் முடிந்த ஒருசில நாள்களில் மீறிக் கொண்டு, சங்கை அபகரித்துக் கொண்ட அசிங்கமான அரசியலைச் செய்து கொண்டிருப்பவர்கள். எப்படி, ஜனாதிபதித் தேர்தல்களில் இருப்பதில் பலம் குறைந்த எதிரியை தமிழ் மக்கள் ஓரணியாக நின்று தெரிவு செய்திருக்கிறார்களோ, அதன் ஒரு பருமட்டான மறுவளமாக, பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் பிரதான கட்சியாக, வடக்குக் கிழக்கில் நிலை கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியை நோக்கிய வாக்குக் திரட்சியைக் காட்ட வேண்டும். யாழ்ப்பாணத்தில் மாற்றுத் தெரிவாக முன்னணி ஓரளவுக்கு அடையாளம் பெற்றிருக்கின்றது. அந்தக் கட்சி ஒரு மாவட்டத்துக்குள் சுருங்கிவிட்டதால், அதனை யாழ்ப்பாணம் தாண்டி பரிசோதிப்பது அபத்தமானது. தேசிய மக்கள் சக்தி, சுயேச்சைக் குழுக்கள் என்று திடீர் கவனக் கலைப்பான்களைப் புறந்தள்ளி, தமிழ்த் தேசியக் கட்சிகளின் பக்கத்தில் குறிப்பாக தமிழரசுக் கட்சியின் பக்கத்தில் திரள்வதுதான் இருப்பதில் ஓரளவுக்கு சிறந்த வாக்களிப்பு முறையாக இருக்க முடியும். அது, வடக்குக் கிழக்கில் ஒரு பலமான அணி மீண்டும் தோற்றம் பெறுவதற்கு வழி ஏற்படுத்தும். அதனைவிடுத்து, தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் மீதான விமர்சனத்தினை முன்வைத்து பெரும்பான்மைக் கட்சிகளின் மீது வாக்குகளை முதலிடுவது, சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுவதைக் காட்டிலும் மோசமானது.

# தேர்தல் தொடர்பாக சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபட இடம் தராதீர்கள்

## மன்னாரில் திணைக்கள தலைவர்களுக்கு அறிவுறுத்து

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடைய அலுவலர்கள் தகாத செல்வாக்கு மற்றும் லஞ்சம் போன்ற சட்ட முரணான பழக்கங்களில் ஈடுபடுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் வே.சிவராஜா மன்னார் மாவட்டத்தில் உள்ள திணைக்கள தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் 'XXXII' இன் பிரிவின் 2 இன் கீழ் அரசியல் உரிமையை அனுபவிப்பதற்கு உரித்துடையவர்களான மன்னார் மாவட்டத்தில் பணியாற்றும் அலுவலர்களில் ஒரு பகுதியினர் நாடாளுமன்றத் தேர்தல் -2024 தொடர்பாக சட்ட முரணான பழக்கங்களில் ஈடுபட்டிருக்கின்றனர் எனத் தொடர்ச்சியாக



முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

குறிப்பாக தமது கடமை நேரங்களில் அரசியல் பிரசாரங்களில் ஈடுபடுதல், தமது கடமைப் பரப்பெல்லைக்கு உட்பட்ட அலுவலகங்களிலும், கடமையாற்றும் கிராம அலுவலர் பிரிவுகளிலும் தமது சேவை நாடிகளான பொது மக்களிடம் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுதல் என்பன போன்ற தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன.

இவ்வாறான கருமங்களில் ஈடுபடும் அலுவலர் ஒருவர் 1981 ஆம் ஆண்டு முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 80 (ஆ) உறுப்புரையின் கீழ் தவறொன்றை இழைத் தவராகக் கருதப்படுவார்.

அலுவலர் ஒருவரின் பதவி வழியாக கடமை அதிகார எல்லை பிரதேசத்தில் அவரால் அரசியல் பிரசார நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவது இவ்வாறான தவறொன்றாக அமையும் என்பது தொடர்பாக தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள அலுவலர்களுக்கு அறிவூட்டும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சுயாதீனம், நடுநிலை மற்றும் சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான தங்கள் ஒத்துழைப்பினை மிகவும் மதிக்கிறேன். - என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.






# அரசியல் கைதிகளை விடுவிப்போம் முதல் பட்ஜெட்டில் சம்பள உயர்வு!

## வவுனியாவில் நேற்று ஜனாதிபதி அநுர அறிவிப்பு





**கி.வசந்தன்**

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அரசியல் கைதிகளை விடுவிப்பதுடன், முதலாவது வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டம் வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இக்கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கலந்து கொண்டு வன்னி மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து உரையாற்றியிருந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த தேர்தலில் பிரசாரத்திற்காக இந்த மாவட்டத்துக்கு வந்தார். வன்னி மக்கள் ஓரளவு வாக்கை அவருக்கு வழங்கியிருந்தனர். இந்த தேர்தலில் அவர் வருவாரா? அதே போல் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ. அவரும் வந்தார். இந்த தேர்தலுக்கு அவர் இங்கு வருவாரா? வரவில்லை ஏன்? அவர்கள் அவர்களது வெற்றிக்காக மாத்திரமே தேர்தலில் நின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் வன்னியில் எமக்கு வீழ்ந்த 21 ஆயிரம் வாக்குகளும் எமது வெற்றிக்கு பாரிய ஒரு பங்களிப்பையும், சக்தியையும் வழங்கியிருந்ததன. இந்த நாட்டில் கள்வர்களையும், ஊழல்வாதிகளையும் மாற்றியமைக்க நீங்களும் உதவியிருந்தீர்கள்.

இந்த நாட்டில் தமிழர், சிங்களவர், முஸ்லிம், பேர்கர் என்ற பிரிவினைகளும், பிரிவினைவாத கட்சிகளும் இருக்கும் வரை நாட்டை ஒன்று படுத்த முடியாது. நாம் இனம், மதம், சாதி என பிரிந்துள்ளோம். தேசிய மக்கள் சக்தி ஓர் இயக்கமாக அனைத்து மக்களையும் ஒன்றிணைத்துப் பயணிக்கும்.

வடக்கு மக்களுக்கு சொந்தமான காணிகள் பாதுகாப்பு காரணங்களுக்காக அரசாங்கத்திடம் இருக்கின்றன. அந்தக் காணிகள் அனைத்தையும் மீண்டும் அந்த மக்களுக்கு நாங்கள் வழங்குவோம். எங்களுக்குத் தெரியும். இங்கு யுத்தம் ஒன்று நடந்தது. பல்வேறு அநீதிகளுக்கு முகம் கொடுத்தோம். இன்று அரசியல் கைதிகள் உள்ளனர். அவர்களை சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கு அமைய விரைவில் விடுதலை செய்வோம் என்று வாக்குறுதியளிக்கிறேன்.

இது சமத்துவமான – ஒற்றுமையான – ஆட்சி. இதனை தென்பகுதி எதிர்க்காது. ஆனால் அன்று அப்பிடி அல்ல. வடக்கில் இவ்வாறு ஒன்று நடந்தால் தென்பகுதி அதற்கு எதிராக இருந்தது. எங்களைப் பிரித்து அரசியல் செய்தார்கள். நாங்கள் இன்று அனைவரும் ஒன்றாக இருக்கிறோம்.

வடக்கின் மீன் வளத்தை பெரிய அளவில் வேறு நாடுகள் வந்து சூறையாடுகின்றன. எமது மீன்வளம் அழியும்வாறாக அதனை செய்கின்றனர். நாங்கள் அரசு என்ற வகையில் எமது மீனவர்களின் உரிமைக்காக வடக்கில் வாழும் மீனவர்களின் பாதுகாப்புக்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

சூரியஒளி இன்று மதிப்பு வாய்ந்துள்ளது. அது எமதுசக்தி. அதனை துண்டு துண்டாக விற்பதற்கு நாங்கள் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். இந்த ஒப்பந்தங்களை எல்லாம் நாங்கள் மீளாய்வு செய்ய வேண்டும். இந்த வளங்களை நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்திற்காக பயன்படுத்த வேண்டும்.

கேரளா கஞ்சா உட்பட போதைப் பொருள் பிரச்சினை இங்கு இங்கு இருக்கிறது. மன்னார் உள்ளிட்ட கடல் ஊடாக அவை வருகின்றன. அவற்றை தடுக்க வேண்டும். எனவே புதிய ஒரு நிலைக்கு இந்த நாட்டை அழைத்துச் செல்லவேண்டும்.

அத்துடன் எமது முதலாவது வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு நிச்சயம் இருக்கும். அதேபோல் மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் மானியம் அதிகரிக்கப்படும். அஸ்வெசும கொடுப்பனவு அதிகரிக்கபடும். அது பலருக்கு கிடைக்காம அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அதனை மீள் பரிசீலனை செய்வோம். பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு ஜனவரியில் பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்ய நிதி வழங்குவோம்.

விவசாயிகளின் உரமானியத் தொகை 15 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரமாக அதிகரித்துள்ளது. கிராமிய விசாயத்தை முன்னேற்றுவோம். மக்களின் வறுமையை ஒழிப்போம். மக்களது வறுமையை ஒழித்து கிராமிய பொருளாதாரத்தின் மூலம் நாட்டை

தொடர்ச்சி ▼

# அரசியல் கைதிகளை விடுவிப்போம் முதல் பட்ஜெட்டில் சம்பள உயர்வு!

தொடர்ச்சி ▲

கட்டியெழுப்புவோம்.

எமது ஆட்சி 3 மாதம், 6 மாதம், 1 வருடம் என கூறுகிறார்கள். ஆனால் நாங்கள் சொல்கின்றோம், இந்த நாட்டை கட்டியெழுப்பும் வரை எமது ஆட்சி தொடரும். ராஜபக்ஷ, பிரேமதாஸ, ஜே.ஆர், விக்கிரமசிங்க, பண்டாரநாயக்கா என மேட்டுக் குடியிடம் இருந்த ஆட்சி அதிகாரம் தற்போது மக்களிடம் வந்துள்ளது. இந்த மாற்றத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அதனால் புலம்புகிறார்கள்.



இந்த அரசாங்கம் மக்களுக்கான அரசாங்கம். அவர்களுக்கு நான் ஒரு சவால் விடுகின்றேன். முடிந்தால் ஜனாதிபதி தேர்தலில் அவர்கள் பெற்ற வாக்கை விட ஒரு வாக்கு அவர்கள் கூட பெற்றுக் காட்டட்டும். ஆனால் எமது தேசிய மக்கள் சக்தி அதை விட அதிக வாக்குகளை பெறும் எனக் கூறுகின்றேன்.

மிளகாய் தூள்களுடனும், கத்திகளுடனும, நாடாளுமன்றம் வந்து சண்டை போட்டவர்களையும், ஊழல்வாதிகளையும் களைய – நாடாளுமன்றத்தை சிரமதானம் செய்து கழுவி சுத்தம் செய்து திசைகாட்டியால் நிரப்பி இந்த நாட்டை மக்கள் எதிர்பார்க்கும் ஒரு நாடாக நவம்பர் 14 ஆம் திகதி மாற்றிக் காட்டுவோம். – என்றார்.

# சுன்னாகத்தில் இளம் பெற்றோரைத் தாக்கிய விடயம் பற்றி விசாரிக்க விசேட பொலிஸ் குழு

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

சுன்னாகம் பொலிஸார் தாக்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க உத்தரவின் பெயரில் விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என யாழ் பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எம்.ஜெருள் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் மதுபோதையில் இருந்த பொலிஸார் ஆறுமாத குழந்தை மற்றும் தாய், தந்தையரைத்தாக்கினர் எனக் கூறப்பட்டது. இது தொடர்பில் நேற்றையதினம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நேற்றைய தினம் யாழ்ப்பாண பிராந்தியத்தின், சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குட்ட பகுதியில் ஹயஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்து ஏற்பட்டது. அந்த விதத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்துள்ளார். எனினும் ஹயஸ் வாகன சாரதி வாகனத்தை நிறுத்தாது சென்றநிலையில் சிவில் உடையில் நின்ற இரண்டு பொலிஸார் வாகனத்தை மறித்துள்ளனர்.




குறித்த சாரதியிடம் சாரதி அனுமதிப் பத்திரத்தை பொலிஸார் எடுப்பதற்கு முயற்சித்த போது பொலிஸாருக்கும் விபத்தை ஏற்படுத்திய ஹயஸ் வானத்தில் இருந்தவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அறிந்த சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சிவில் உடையில் இருந்த வேறு சில பொலிஸாரும் அந்த இடத்திற்குச் சென்று குறித்த சாரதியின் சாரதி அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். இதன்போது வாக்குவாதங்கள் ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளதாகவும் அறியக்கூடியதாக உள்ளது.

பொலிஸாரினால் பொதுமக்கள் தாக்கப்பட்டதாக சமூக ஊடங்களில் பரவலாக பேசப்பட்டது. இச் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க உத்தரவின் பெயரில் விசேட போலீஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவானது இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும். பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டார்கள் என விசாரணைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டால் அந்த பொலிஸார்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொலிஸ் ஒழுக்கற்று நடவடிக்கையும் எடுக்கப்படும்.

பொதுமக்களுடைய பாதுகாப்பிற்காகவே பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். பொலிஸார் தன்னிச்சையாக செயல்படக்கூடிய எந்த அதிகாரமும் கிடையாது. பொலிஸாருக்கு ஒரு வரையறை இருக்கின்றது. அதை மீறிசெயற்பட்டிருந்தால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

விசாரணை பக்கசார்பற்றதாகவும் சுதந்திரமானதும் நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருக்கிறார். நேர்மையாகவும் பக்கச்சார்பற்றதாகவும் அது இடம்பெறும். – எனத் தெரிவித்தார்.




# உள்நாட்டு விவசாயிகளின் பயறு உற்பத்தியை சதொச ஊடா கொள்வனவு செய்யத் தீர்மானம்

உள்நாட்டு விவசாயிகளின் பயறு உற்பத்தியை சதொச ஊடாக அதிக விலைக்கு கொள்வனவு செய்ய வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

இடைத்தரகர்கள் குறைந்த விலைக்கு பயறு கொள்வனவு செய்கின்றமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.நய்முதீன் தெரிவித்துள்ளார்.

சதொச ஊடாக ஒரு கிலோகிராம் பயறு 488 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படுகின்றது.

இடைத்தரகர்கள் இதனை 425 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

# மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு



மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகலாம் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடி, மின்னல் தாக்கங்களிலிருந்து ஏற்படும் அனர்த்தங்களை தவிர்ப்பதற்கு பாதுகாப்பாக செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் இருவர் வசமாகச் சிக்கினர்!

இரு வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின்போது உள்நாட்டுத் துப்பாக்கியை வைத்திருந்த சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊவா கங்கொடகம பிரதேசத்தில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் தபகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடையவர் ஆவார்.

மேலும், கிரில்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நபடயாய பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



கைது செய்யப்பட்டவர் நிக்கவெரட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவர் ஆவார்.

# மனைவி சடலமாக மீட்பு! கணவன் தலைமறைவு!!

புத்தளம், முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹமா எலிய பகுதியில் உள்ள வீடொன்றில் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹமா எலிய பதுலுஓய பிரதேசத்தைச் சேர்ந்த 27 பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சடலமாக மீட்கப்பட்ட பெண் தனது கணவருடன் வீட்டில் வசித்து வந்த நிலையில், கணவன் அங்கிருந்து தப்பியோடியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

சடலம் புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.11.2024



## மேஷம்

இன்று கோவில் சென்று சம்பிரதாய முறைப் படி வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். இதன் மூலம் அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தள்ளிப் போடவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் முறையாக திட்டமிட்டு ஒழுங்கமைப்பதன் மூலம் சிறப்பாக பணி களைக் கையாளலாம்.

உங்கள் துணையிடம் இன்று தகவல் பரிமாற்ற சிக்கல் காணப்படும். அனுசரித்து புரிந்து கொள்வதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படுத்த இயலும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களுக்கு சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.



## ரிஷபம்

இன்று மனக்குழப்பத்துடன் காணப் படுவீர்கள். இதனால் ஆரோக்கியமற்ற மண் நிலையும் வேதனையும் காணப்படும். பிரார்தனை மற்றும் இசை கேட்டதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் சில சவால்கள் நிறைந் திருக்கும். சிறப்பாக திட்டமிட்டு பணியாற்றினால் உங்கள் செயல்திறன் சிறப்பான நிலையில் இருக்கும்.

உங்கள் பதட்டமான மனநிலையை உங்கள் துணை யிடம் காண்பிப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பிரிய- மான ஒருவரின் ஆரோக்கியத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.



## மிதுனம்

இன்று வருத்தங்களை ஒதுக்கித தள்ளுங்கள் அமைதியாக இருக்க வேண்டும். வெற்றிக்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

உங்கள் செயல்திறனில் அதிருப்தி காணப்படும். அதிகப் பணிகளை கையாள முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு பாதிக் கப்படும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். சேமிப்பது கடினமாக காணப்படும். உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பல் வலியால் பாதிக்கப்படலாம். தகுந்த சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.



## கடகம்

இன்று சிறிய முயற்சியில் பெரிய விஷயங்களை சாதிப்பீர்கள்.இன்று உங் களிடம் நம்பிக்கை நிறைந்து காணப் படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் பங்கு பெற நேரலாம். உங்கள் மேலதிகாரிகள் இந்த சந்திப்பில் நீங்கள் பங்கு பெறும்முறை, உங்கள் கருத்து மற்றும் உங்கள் தகவல் பரிமாற்றம் கண்டு ஈர்க்கப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் நட்புடன் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் கடின உழைப்பு மற்றும் முயற்சி மூலம் இன்று பணவரவு காணப்படும். இன்று புதிய முதலீடு களை செய்ய இயலும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியத்தை ஸ்திரமாக பராமரிப்பீர்கள்.



## சிம்மம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை யும் திருப்தியையும் அளிக்கும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல லுறவு காணப்படாது. அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகளை பேசுவதை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும்.

இன்று தேவையற்ற செலவுகள் அதிகமாக காணப்படும். அதனால் பணம் அதிகமாக செலவாகும்.

தோல் சம்பந்தமான பிரச்சினை காணப்படும். எண் ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்.



## கன்னி

இன்று பதட்டப்படாமல் சமநிலை யோடு இருங்கள். உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை நம்பிக்கையோடு சமாளிக்க வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக உங் களால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் சகபணியாளர்களுடன் நல லுறவு காணப்படாது. இன்று நீங்கள் சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினை காரண மாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனைப் போக்க மனம் திறந்து பேச வேண்டும். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று பணம் சம்பாதிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அதிக செலவுகள் காணப்படும்.



## துலாம்

இன்றைய சூழ் நிலையில் நீங்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். தியானம் சிறந்த பலனைத் தரும். நம்பிக்கை அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். பணி களை குறித்தநேரத்தில் முடிக்க முறையாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந் துணர்வும் நல்லிணக்கமும் ஏற்பட நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தலைவலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியான போக்கு சிறந்த பயன் அளிக்கும்.



## விருச்சிகம்

வெற்றிகளை பெற்றுத் தரக்கூடிய உறுதியான முடிவுகளை எடுப்பீர்கள். கடினமான பணிகளை எளிதாக முடிப் பீர்கள். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.இதனால் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். இருவரும் பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக இருக்கும் காரணத்தால் நீங்கள் பயனுள்ள முதலீடு செய்ய நினைப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.11.2024




இன்று மகிழ்ச்சியான நிகழ்வுகள் ஏற்படலாம். உங்கள் முன்னேற்றத் திற்காக நேரம் செலவு செய்வீர்கள். உங்கள் மென்மையான பேச்சு உங்கள் வெற்றிக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் நல்ல பலனளிக்கும் வகையில் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். வேலை தொடர்பான பயணம் உங்களுக்கு நல்ல பலனளிக்கும்.

உங்கள் இனிமையான வார்த்தை மூலம் இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான சூழல் காணப்படும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் அன்புன் பெருகும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். சிறிய கடன் வகையில் இன்று பணம் பெருவீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் மன உறுதி காரணமாகஇன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவலையுடன் காணப்படு வீர்கள். அதனால் உங்களால் சிறப் பாக செயலாற்ற இயலாது. உங்கள் செயல்களை சாதரண போக்கில் எடுத் துக் கொள்ள வேண்டும்.

இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால் சிறப்பாக பணியாற்ற இயலாது. முறை யாக திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக கையாளலாம்.

இன்று உங்களிடம் மன உறுதி குறைந்து காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதும் சேமிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகுவலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்து மூலம் குணமாகும்.




இன்று உங்களுக்கு சிறப்பான சாதகமான நாள். இது உங்கள் கடின உழைப்பின் மூலம் சாத்தியம் ஆகும்.

உங்கள் பணியாற்றும் திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல் லுறவு காணப்படும்.

உங்கள் துணையுடன் ஒற்றுமையாக இருப்பீர் கள். இதனால் உங்களுக்கு மனதிருப்தி ஏற்படும். உங்கள் துணைக்கு மகிழ்ச்சி கிட்டும்.

எதிர்பாராத பணவரவு காணப்படும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியா னம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை சிறப் பாக்கலாம்.




உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி மூலம் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமைக் கான புகழ் பெறுவீர்கள். உங்களுள் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்.

உங்கள் திடமான முயற்சி மூலம் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம். உங்கள் திறமை மற்றும் தகுது காரணமாக நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உற்சாகமான போக்கை கடைபிடிப்பதன் மூலம் உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை அனுபவிக்க லாம். இதனால் இனிமையும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சேமிப் பும் அதிகமாக காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது. உங்கள் மன உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.

